## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் கணிப்பீடு செய்யப்பட்டதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 2,080,272 தொகையாக இருந்த போதிலும் அது ரூபா 1,749,232 என கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 331,040 தொகையால் குறைவாகவும், ஆண்டின் இலாபம் ரூபா 331,040 தொகையால் அதிகரித்தும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசம்

கணனி மற்றும் அலுவலக உபகரணம், தளபாடமும் பொருத்தியும் மற்றும் மென்பொருள் போன்ற மூன்று நிலையான சொத்து விடயங்கள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுக்கும் நிலையான சொத்துப் பதிவேடுகளுக்கும் இடையே முறையே ரூபா 892,519 தொகையும், ரூபா 2,009,952 தொகையும் மற்றும் ரூபா 92,822 தொகையும் ஆன வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 1.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 120(அ) பிரிவு | ரூபா 546,440 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரியை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதி வரை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 341 | வருமானச் சேகரிப்பிற்காக பயன்படுத்தப்படுகின்ற பற்றுச்சீட்டுப் புத்தகங்களுக்காக அடியிதழ் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நி.பி.387 | 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான காசேட்டு மீதியை விஞ்சி ரூபா 1,437,745 கூட்டுத்தொகையான காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | நி.பி.756(5) | 2012 ஆம் ஆண்டிற்காக குறித்த மாதிரிப் படிவம் பயன்படுத்தப்பட்டு பொருள் மெய்மையாய்வு முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2000 சனவரி 31 ஆந் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் | முன்னைய வருடங்களைப் போன்றே மீளாய்வாண்டிலும் உத்தியோகத்தர்களினால் செலுத்த வேண்டிய ரூபா 665,579 கூட்டுத் |

| | | |
|---|---|---|
| | இலக்க அரச பொது நிதிச் சுற்றுநிருபத்தின் 24 ஆம் பந்தி | தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஊ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் பதிவேடு உரிய பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

## 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்காக காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) ஆணைக்குழுவினால் 2012 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்பட்ட ரூபா 160,470,441 பெறுமதியான 234 நாட்குறிப்புப் பதிவுகளுக்காக முறையான அங்கீகாரத்துடனான மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டுப் பிரயாணம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு இணைந்த மற்றும் அமையப் படிகளைக் கொடுப்பனவு செய்யும் போது கொடுப்பனவு உறுதிச்சீட்டில் பிரயாண விபரம், பிரயாணத்திற்காக எடுக்கப்பட்ட காலம் மற்றும் வீதக் கணிப்பீடு, விமானப் பயண விபரம், வெளிநாட்டு அனுசரணைகளை வழங்குதல் போன்ற விபரங்கள் எதுவும் உள்ளடக்கப்படாது செலுத்தப்பட்ட மொத்தத் தொகை மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழு நிதிகளின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 29,967,560 தொகை செலவினங்களை விஞ்சிய வருமான மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான செலவினங்களை விஞ்சிய வருமான மிகை ரூபா 55,978,423 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 26,010,863 தொகையான குறைவினைக் காணக்கூடியதாக இருந்தது. இக்குறைவுக்கு முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 47,669,634 இனால் அதிகரித்திருந்தமை தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 7 பிரதான செயற்பாடுகளின் கீழ் நிறைவேற்றவேண்டிய 66 செயற்பாடுகள் காணப்பட்ட போதிலும் 2012 திசெம்பர் 31 அந் திகதி வரையிலும் அதில் 32 செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் காணப்பட்டன.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவிற்குக் கிடைத்த 466 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 425 இற்கு தீர்வுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மேலும் 41 முறைப்பாடுகள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 14(2)(1) ஆம் பிரிவின் கீழ் மின்சாரம், நீர், பெற்றோலியக் கைத்தொழில் தொடர்பான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்காக 2004 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரை மீண்டெழும் செலவினமாக ரூபா 356,177,653 தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 61,383,125 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், மின்சார கைத்தொழில் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் 2009 ஏப்ரல் 08 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படுவதுடன் நீர் மற்றும் பெற்றோலியக் கைத்தொழில் தொடர்பாக உரிய அதிகாரச்சட்டங்களின் திருத்தம் அங்கீகரிக்கப்பட்டிராமையால் அக் கைத்தொழில்களின் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. இருந்த போதிலும் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் பெற்றோலியக் கைத்தொழில் தொடர்பான ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் மெ.வோ 25 இற்கு மேற்பட்ட இயலளவில் மின் உற்பத்தி செய்யப்படுகின்ற 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் பங்கு மூலதனம் 50 சதவீதத்தை விடக் குறைவான கம்பனிகளுக்கு மின் உற்பத்திக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட முடியாது. தற்போதும் மெ.வோ 25 இற்கு மேற்பட்ட இயலளவில் மின் உற்பத்தி செய்யப்படும் 06 கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிராததுடன் அக்கம்பனிகளினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் இலங்கை மின்சார இயலளவிற்குச் சேர்க்கப்பட்டிருந்தது. இந்நிலைமையினைச் சரிசெய்வதற்கு 2012 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக்கம்பனியின் தேவைகள் பூர்த்திசெய்யப்படாமையினால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்க முடியாதிருந்ததாக தலைவர் அறிவித்திருந்ததார்.

(உ) மசகு எண்ணெய் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடும் 14 கம்பனிகள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் பட்டியல் பெறுமதியின் 0.5 சதவீதமான மாற்று பதிவுக் கட்டணங்களில் ரூபா ஒரு மில்லியனை விஞ்சிய கொடுக்கல் வாங்கல்களை 11 கம்பனிகள் மாத்திரமே செய்திருந்தன. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் 11 கம்பனிகளிலிருந்து மாற்று பதிவுக் கட்டணமாக ரூபா 32,704,473 தொகை ஆணைக்குழுவிற்குக் கிடைத்திருந்தது.

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான (ETF) கொடுப்பனவுகள் தாமதமானமையால் ரூபா 8,571 தொகை மிகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு குழு

அரசாங்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டிற்கு ஆகக் குறைந்தது 4 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்காக ஆணைக்குழுவினால் 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

**நிதியேற்பாட்டை விஞ்சிய செலவினங்கள்**

2012 ஆம் ஆண்டின் 04 செலவின வகைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 1,137,023 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) முதலீடு செய்தல்

(ஆ) வருமானக் கட்டுப்பாடு

(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு